த்ரிசங்கு

ஏற்றுக்கொள்ள மிக மிகக் கஷ்டமானது அவரவர் சராசரித் தனம்தான் என்று அவளுக்குத் தோன்றியது. அதனுடன் வாழ்நாள் முழுவதும் வாழப் போகிறதைப் போன்ற பயங்கரம் வேறு எதுவும் இல்லை என்று நினைத்தாள்.

புரொபஸர் முன் நின்று ஒரு கேள்வி கேட்டு அவர் 'பளிச்' சென்று தாக்கிப் பதில் கூறும்போது அவள் சராசரித்தனம் நாக்கைக் கன்னத்துள் நுழைத்து அவளை நையாண்டி செய்தது. புரொபஸர் அறையில் அமர்ந்து அவர் தீவிர ஆராய்ச்சி செய்துள்ள சரித்திர காலத்தைப் பற்றிப் பேசி அவர் குற்றங்களை எல்லாம் அக்கு வேறு ஆணி வேறாக அலசி எடுத்து தகப்பன் சாமியாக வேண்டும் என்று நிரம்ப ஆசை இருந்தது. ஆனால் அவள் புதிதாகப் படித்துள்ள ஒரு புத்தகம் பற்றிச் சொன்னால் அவர் அதைப் பற்றி, அதை அடுத்து வந்துள்ள கட்டுரை யைப் பற்றியே சொல்லிவிடுவார்.

அவள் சராசரித்தனம் அவளுக்கு மட்டுமல்ல, அவள் புரொ பஸருக்கே சங்கடமான ஒன்றாகத்தான் இருந்தது. அவள் தீஸிஸ் எழுதிமுடித்ததும் இன்னொரு புரொபஸரிடம் – அன்று ஆகஸ்ட் பதினைந்து –

"இன்று என்ன நாள்?" என்று கேட்டு, "என் சுதந்திர நாள்; அஞ்சனா தீஸிஸ் முடித்தாகிவிட்டது" என்றதாகக் கேள்வி. இதைவிட அவளைப் பாதித்தது அவள் எழுதிஎழுதித் திருத்திய ஓர் ஐந்து பக்கங்களை அவர் இனி திருத்த முடியாமல் வீசி எறிந்துவிட்டு, ஒரு பேப்பரையும் பேனாவையும் அவள் கையில் தந்து, ஒரு மணி நேரம் அப்பக்கத்தில் வர வேண்டிய கருத்துக்களை கமா, ஸெமிக்கோலன், ஃபுல்ஸ்டாப் இவற்றுடன் கூறி முடித்து, "இப்போது நீ இதை வெற்றிகரமாக எழுதி விட்டாய்" என்று சொன்னதுதான்.

இந்த சராசரித்தனம் நான் பெண்ணாக இருப்பதாலா என்று கேட்டுக் கொண்டாள் சில சமயம்.

ஆனால் அது உண்மையில்லை.

புதிதாகச் சேர்ந்த மாணவிகள் 'படக்' கென்று எழுந்து முப்பது பேர் உள்ள கருத்தரங்கில் மிகச் சாதாரண கேள்வியை சூயிங்கம் மென்றவாறே கேட்டுவிட்டு, பக்கத்தில் இருந்த மாணவனிடம் தன் சிகரெட்டைப் பற்றவைத்து, பதிலை எதிர்பார்த்தவாறே புகையை ஊதினர். அந்தத் தன்னம்பிக்கை அவளை அதிர வைத்தது.

"அந்த புரொபஸர் ஒரு ஜீனியஸ்" என்று அவள் குறிப்பிட்டால், "யார், அவரா? தேவலை. நேற்று நிறைய உளறினார்" என்று சாதாரண மாக, சர்வ அலட்சியமாக பதில் வந்தபோது, அவர்களின் இந்தக் கர்வத்தைக் கண்டு அவள் பொறாமைப் பட்டாள்.

அவள் கர்வியாக இருக்க ஆசைப்பட்டாள்.

ஆனால் அவளால் நடுங்கவும், குழையவும்தான் முடிந்தது. யூ.டி.ஸியான அவள் அப்பா அவர் ஆபீஸர் தன்னை நாயாய் நடத்தியதை எல்லாம் தன் பார்வையால், பெருமூச்சால், சுவாசத்தால், பேச்சால், பெங்களூர் மாவள்ளி ஸர்க்கிள் அருகே இருந்த சந்து வீட்டின் எலிப் பொந்து அறைகளில் வியாபிக்க விட்டுவிட்டாரா? அதை சுவாஸித்துதான் அவள் வளர்ந்தாளா?

அவள் மனத்தில் மிக ஆழமாகப் பதிந்தது அவள் தந்தை அவர் ஆபீஸரின் காலைப் பற்றியவாறே "நான் பிள்ளைகுட்டிக்காரன். இனிமே பணம் கையாடலை" என்று கதறியதுதான். தான் வலுக் கட்டாயமாக நிர்வாணமாகப்பட்டதைப் போல் அவள் அப்போது உணர்ந்தாள். நிர்வாணமான அழகற்ற உடல் மேல் பலர் உமிழ்ந்த எச்சில் வழிவதைப் போல் ஓர் அவலமான கேவல உணர்வு அப் போது பிறந்தது.

பதிலுக்குத் தாக்க அவள் விரும்பினாள்.

முடிந்ததெல்லாம், முதுகை வளைத்து "அடியுங்கள் ஸ்வாமி" என்று கேட்டு வாங்கிக்கொள்ளும் மனப்பான்மைதான். அவள் தந்தையின் ஆபீஸர் ஒரு மழைக்கால மாலை அவளை பஸ் ஸ்டாப்பி லிருந்து தன் காரில் ஏற்றிக்கொண்டு போய் "இப்போ நான் உன்னை முத்தம் குடுத்தா நீ என்ன செய்வே?" என்று கன்னடத்தில் கேட்ட போது, அவளால், கண்ணகிச் சீறல் சீற முடியவில்லை. கன்னங்களில் நீர் வழிந்தோட, எதிரே வெறித்தவாறு, கர்ப்பமுற்று சோகித்துப் போன பல கதாநாயகிகளின் கதி தனக்கும் வருவதாக, பீதியுடன் எண்ணத்தான் முடிந்தது. வீடு திரும்பியதும் இரண்டடி பாத்ரூமில் தன் உடைகளைக் கழற்றி தன்னைத் தானே பலமுறை தடவிப் பார்த்து, அப்பா திருடிய பணத்துக்காகக் கடிக்கப்பட்ட தன் உதடுகளையும், பிசையப்பட்ட மார்பகங்களையும் எண்ணி தடுக்கின் வெளியே சத்தம் கேட்காமல் அழுதாள். அவள் சாப்பிட்ட கருவேப் பிலைத் துவையலும், பருப்பில்லா வெறும் புளி ரஸமும் சண்டையிடும் திராணியைக் கைப் பற்றி

விட்டனவா? "அவள்" என்ற ஒன்று மழுங்கிப்போன கத்தியாய்ப்போய், புகைமூட்டமாய், பறக்கும் பஞ்சின் இதழாய்த் தான் அலைக்கழிக்கப் படுவதை அவள் அறிந்தாள்.

அப்படிப்பட்ட ஒரு காற்றின் ஊதலில்தான் அவள் அயல்நாட்டுக் கொள்கை ஆராய்ச்சியில் தள்ளப்பட்டாள்.

அவள் ஸ்காலர்ஷிப்பில் படித்ததால் அப்பா கவலைப்படவில்லை. ஒரே ஒரு முறை அவர் "வேலை செய்யேம்மா, வீட்டுக்கானும் உபயோகம்" என்றபோது அவள் தன் ஏக்கம் நிரம்பிய கண்களால் அவரைப் பார்த்து "அப்பா என்னைப் படிக்க விடுப்பா. நான் வேணா கல்யாணம் பண்ணிக்கலே" என்றாள். அதன் பின் அவர் பேச வில்லை.

எல்லாவற்றையும் மலையாய் நினைத்து அயரும் மலைப்பும் மும்முரமும் அவள் வர்க்கத்துக்கே உரியது என்று தோன்றியது. டாயன்பீயைப் புரட்டி மற்றவர்கள் அனாயாசமாக விளாசித்தள்ளிய போது அவளால் பத்துமுறைகள் அதை மனத்தில் யோசித்துப் பார்த்து தான் பேச முடிந்தது. படிப்பில் கூட முதுகு ஒடியப் படிக்கும் கழுதைத்தனம்தான் வந்தது. தான் மேலேமேலே படிப்பது ஒரு குமாஸ்தா பெறும் படிப்படியான உயர்வின் வகையைச் சேர்ந்தது தான் என்று அவளுக்குப் பட்டது. ஆனால் நேரிடையாக ஒரு கிளார்க், ஒரு ஸ்டெனோகிராஃபர், ஒரு டைப்பிஸ்ட் ஆவதை மட்டும் அவள் மனமாற வெறுத்தாள். அடி மட்டத்தில் இந்த குமாஸ்தாத்தனம் இருப்பதை மட்டுமே அவளால் ஓரளவு பொறுத்துக் கொள்ள முடிந்தது.

மின் வண்டியில் விகடன், குமுதம் படித்தவாறே போய்க்கொண்டு, அல்லது அத்தை பையன் பற்றியோ, பக்கத்து வீட்டு நறுக்கு மீசை பற்றியோ வம்படித்தவாறே வேலைக்குப் போய்க்கொண்டு மாதா மாதம் பணம் சேர்த்து வெளிநாட்டு நைலக்ஸ வாங்க வேண்டுமென்ற எண்ணமே அவளுக்குக் கசப்பை உண்டாக்கியது.

அவள் தன் குணாதிசயங்கள் பூரணமாக மலர்ச்சி பெற்று, ஓங்கார மாய் விஸ்வரூபம் எடுத்து, தன்னைத் தான் யார் என்று நிரூபணம் செய்துகொள்ள விரும்பினாள். வழிகள் புலனாகவில்லை.

தன்னைப் பற்றிய, தன் அறிவு மட்டம் பற்றிய நிதரிசனம் அவளுக் குள் ஒரு பயங்கலந்த கூச்சத்தை ஏற்படுத்தியது. இயல்பாக அவளை வந்தடைந்த பின் வாங்குதலை மீறி அவள் ஓர் அடி எடுத்து வைத்த போது, கசையடிபட்ட அடிமையைக் காட்டிலும் அதிகமாகச் சோர்வையும், தளர்ச்சியையும், அனாதைத்தனத்தையும் அவள் உணர்ந்தாள்.

அதனால்தான் நரசிம்மராவ் அவளிடம் வந்து "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றதும் அதை ஓர் ஏப்ரல் ஃபூல் ஹாஸ்யமாக அவள் நினைத்துப் புண்பட்டுப் போனாள். ஒருநாள் பின் மாலை

கல்லூரி லைப்ரரியிலிருந்து வெளிப்பட்டு, கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்தவாறே பஸ் ஸ்டாப்பிற்குப் போக அவள் நடக்க ஆரம்பிக்கையில் நரசிம்மராவ் அவளை வழிமறித்து,

"காப்பி சாப்பிடலாமா?" என்று கேட்டான்.

"நான் மாவள்ளி ஸர்க்கிள்வரை போகணுமே?"

"நான் மோட்டர் பைக்கிலே கொண்டு விட்டுடுவேன்."

"டர்ம் பேப்பர் பத்தி பேசணுமா? நான் இன்னும் முடிக்கலையே?"

"இல்லை. அதைப் பத்தி பேச இல்லை."

அவளுக்கு வியர்த்தது. அவனுடன் நடக்கலானாள்.

எஸ்ப்ரஸோ வரவழைத்துவிட்டு அவன் மெல்லச் சொன்னான்:

"எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கிறது."

அன்று ஏப்ரல் ஒன்றாம் தேதி. அவள் முகம் சுருங்கியது.

"ஏப்ரல் ஃபூல் ஆக்க வேறு யாரும் இல்லையா? நான் ஏதோ என் பாட்டுக்கு. . ."

"டோன்ட் பி என் ஆஸ்" என்றான் அவன். "உண்மையாதான் சொல்றேன்." அவன் அவள் கரங்களைப் பற்றிக்கொண்டபோது அவள் மெல்ல எழுந்துகொண்டாள். அந்த ஹோட்டலின் டாம்பீகத் துடன் ஒவ்வாத பழுப்புக் கைத்தறித் துணியில் சிறு மஞ்சள் பார்டர் போட்ட புடவையுடன் நின்றுகொண்டு, அந்த வேண்டுமென்றே மங்கவைத்த வெளிச்சத்தில் அவள் புருவம், கன்னமேடு, தாடை எல்லாம் வியர்வையால் அதீத வழவழப்போடு ஜொலிக்க மிகவும் பரிதாபமாக அவள் "ஐ வான்ட் டு பி ஸம்படி" என்றாள் தொண் டையை அடைக்க.

அவனுக்குப் புரியவில்லை.

அவள் 'சட்' டென்று அமர்ந்து தான் காதலிக்கப்படுகிறோம் என்று தெரிந்ததும் பெண்கள் சாதாரணமாகச் செய்யாத ஒன்றைச் செய்தாள். மேஜைமேல் தலை கவிழ்த்து அழுதாள்; நீண்ட மூச்சை அடைத்த கேவல்களோடு.

அதுதான் காதல் போன்றவற்றின் அந்தம்.

எம்.ஏ. முடித்ததும், பெங்களூரில் படித்து முடித்த நல்ல மாணவி யாய், "ஹொய்சல கலை" பற்றி ஆராய்ச்சி செய்ய அவள் பதிவுசெய்து கொண்டாள்.

புரொபஸர் பசவய்யாவுக்கும் அவள் தேர்ந்தெடுத்த பொருளுக் கும் சம்பந்தமில்லாவிட்டாலும் அவர் கீழ் பதிவுசெய்துகொண்டு இன்னொரு விரிவுரையாளர் உதவியில் ஆராய்ச்சி நடந்தது. புரொ பஸர் பசவய்யாவிடம் ஒரு பயங்கரத் தாழ்வுணர்ச்சி இருந்ததாக அவளுக்குப் பட்டது. அவர் அமெரிக்கா போனபோது அவரைக்

கருப்பனாய் எண்ணிக் கருப்பனாகவே நடத்தினார்களாம். ஒரு ஹரிஜன ஹாஸ்டலின் ஏழை மாணவனாய் இருந்த அவர் ஏதோ ஒரு சமயம் அசடு வழிந்ததால் ஹாஸ்டலின் பெண் வார்டனையே திருமணம் செய்துகொள்ள நேரிட்டுவிட்டதாம். அவர் மனைவி அவரைவிட ஏழு வயது பெரியவள். மற்றவர் சுட்டிக்காட்டிப் பேச அதுவும் ஒரு கரும்புள்ளி. அமெரிக்கா புரொபஸர்கள் வரும்போது நாக்கைத் தொங்கப்போட்ட நாயாகவே அவர் வளைய வருவார். ஒரு கறுப்பு அடிமையைப் போலவே அவர்களும் அவரைத் தட்டிக் கொடுத்து அதட்டி வந்தனர். அவர் ஒரு வார்த்தை பேசும் முன் எச்சில் பெருக்கெடுத்து வாயை அடைத்துக்கொள்ளும். அதனூடே திக்கித் திணறி அவர் தன் பொருளை விளக்கும் முன் யூனிவர்ஸிடியின் மற்ற புரொபஸர்கள் அவரைச் சொற்களால் தாக்கிக் கிழித்துவிடுவார் கள். மனம் குறுகிய கிராமத்தில் கிணற்றைத் தொட முடியாமல் தடுக்கப்பட்ட ஹரிஜனனுக்கும், இவருக்கும் வித்தியாசம் இருப்ப தாகத் தெரியவில்லை. கல்விச் சூழலில் அவரை நாசூக்காய் ஆக் ரோஷமாய் வெறியுடன் தாக்கி, "பார், நீ தூக்கிநிறுத்தப்பட்டவன் தான்" என்று மறைமுகமாகச் சொன்னார்கள். சில சமயம் கன்னங்கள் உப்பிய அந்த முகம் அழுகையில் கோணி விடுமோ என்று அவள் நினைத்ததுண்டு.

புரொபஸர் பசவய்யாவின் ஒரே ஒரு தப்பித்தல் இளம் பெண் களை நேசிப்பது தான். இது அஞ்சனாவுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒரு முறை ஒரு முக்கிய புத்தகம் எடுத்துக்கொள்ள ஞாயிற்றுக் கிழமை அவர் வரச்சொன்னார். அவர் அறை, லைப்ரரியின் மேல், வளைவுப் படிகளின் மூலம் ஏறி அடைய வேண்டியது. அவள் போனாள், புரொபஸர் புத்தகம் அலமாரியில் இருப்பதாகச் சொன் னார். அவள் அதைத் தேடும்போது அவர் கரங்கள் அவளை சுவ ரோடு அழுத்தின. ஒரு கணம் மயக்கமே அடைவது போன்ற உணர்வில் தவித்துப் பின் திமிறிக்கொண்டு வளைவுப் படிகளில் கீழே ஓடினாள். புரொபஸரின் காலடி தொடர்ந்தது.

லைப்ரரி கீழே பூட்டியிருந்தது. ஓர் அவல ஓலத்தை அவள் எழுப்ப முயன்றபோது அவர் சட்டென்று பயந்து "ஹோகு, ஹோகு" என்று கதவைத் திறந்து விட்டார். வெளியே ஓடினாள்.

மரங்கள், புல்வெளி எல்லாம் திடீரென்று பிரம்மாண்டமாய் மேலெழுந்து அவளைத் தாக்கியது. பெரிய, உடைந்த மூச்சாக வெளியே வந்தது சுவாஸம்.

"ஹொய்சல கலை"யை அவள் தீவிரமாக வெறுத்தாள். அப்போது மாணவர்களிடம் கூறி பசவய்யாவின் வேஷங்களைக் கிழித்துத் தனக்குப் பாதுகாப்புத் தேடிக்கொண்டிருக்கலாம். அவள் செய்ய வில்லை. ஆறு மாத, எட்டு மாத சிறு ஆராய்ச்சிகளில் உதவிக்கொண்டு,

மீந்த நேரங்களில் வீட்டின் பழுப்பேறிய சுவர்களைப் பார்த்து வெறித்தவாறிருந்தாள்.

அப்போதுதான் அனைத்துலகத் தொடர்பு பற்றி ஆராய்ச்சி செய்ய வடக்கே ஒரு ஸ்தாபனம் இருப்பதாகப் பேப்பரில் படித்தாள். நேர் முகத் தேர்வுக்கான அழைப்பு வந்தது.

அவள் மூளையில் வெறும் வெறுமை. அப்பட்டமான வெறுமை. எதுவும் நினைவுக்கு வராத தேக்கம். அப்படியும் போனாள்.

பொது அறிவு வினாத்தாள் வந்தது.

கீழ்க்கண்டவர்கள் / கீழ்க்கண்டவைகள் யார் / எவை?

லியாகத் அலிகான்

அங்கோலா

பகத்சிங்

தேஜ் பகதூர் ஸப்ரு

மார்டின் லூதர் கிங்

நோம் பென்

சிலி

1. *சுதந்திரப் போராட்டத்தில் காந்தியின் பங்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*
2. *அரபு நாடுகளில் அமெரிக்கா கொண்டுள்ள வெளிநாட்டுக் கொள்கையின் பின்னுள்ள கருத்துக்கள் எவை?*
3. *ரஷ்யாவின் புரட்சி ஒரு முடிவடையாத புரட்சி என்று சில சரித்திராசிரியர்கள் கருதுகிறார்கள் – ஏன்?*

எழுத்துக்கள் கறுப்பு ஈக்களாய் பறந்தன கண்முன். லியாகத் அலி கான் யார்? விலாயத்கான் போல் ஒரு ஸிதார் கலைஞரா? இருக்காது. இது அனைத்துலகத் தொடர்பு பற்றியது. பகத்ஸிங் பெயர் கேட்ட பெயராக இருந்தது. ஹாக்கி ஆட்டக்காரரோ? எல்லா ஸிங்குகளும் விளையாட்டு மன்னர்கள்தான். பெரிய கேள்விகளில் ஒன்றுகூட எழுத முடியவில்லை. காந்தி என்றவுடன் வெறும் அரை முழ வேஷ்டியும், பொக்கை வாயும்தான். நினைவுக்கு வந்தது. தன்னை அவள் ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். "அஞ்சனா, நீ எம்.ஏவில் முதல் வகுப்பில் தேறி இருக்கிறாய். இதை எல்லாம் ஓரளவு படித்திருக் கிறாய். யோசி யோசி" என்று சொல்லிக்கொண்டாள். மூளை குட்டை யாகக் குழம்பியது.

வெளியே வந்தாள்.

"காந்தி ஒரு பூர்ஷுவா. அவர் சுதந்திரத்திற்காகத் தயார் செய்து வைத்தவர்கள் முதலாளித்துவமும், அரைவேக்காடு மனிதாபிமான மும் கொண்டுள்ள பிரபுக்கள்தான்."

"அமெரிக்காவிலுள்ள யூதர்களின் தொகை அரபு-இஸ்ரேல் நாடுகளிடம் உள்ள உறவைக் கணிப்பதில் ஒரு முக்கியமான விஷயம். அவர்கள் எப்படி, வலியுறுத்திக் கொள்கையை உருவாக்கும் ஒரு குழுவாய் இருக்கிறார்கள் என்று நான் எழுதினேன்."

"ஓ, நான் அமெரிக்க-ரஷ்ய உறவின் ஒரு அங்கமாய் வைத்து எழுதினேன்."

தங்குதடையில்லா ஆங்கிலத்தில் மற்றவர்கள் தங்கள் பதில்களைப் பற்றி சர்ச்சை செய்தனர். அவள் கால்கள் முட்டிகளின் கீழே கிழிந்த துணியாய் பலமற்றுத் தொய்யும் உணர்வு ஏற்பட்டது.

ஒரு ப்யூன் வந்து அவள் மனுச் செய்திருந்த பிரிவின் விரிவுரையா ளர் அவளை அழைப்பதாகக் கூறினான்.

"என்ன, பொது அறிவு பேப்பர் எப்படி இருந்தது?"

"என்னால் ஒரு கேள்விக்கும் பதில் கூற முடியவில்லை."

"நீங்கள் எம்.ஏவில் முதல் வகுப்பு, இல்லை?"

"ம்."

"ஒரு வருஷமாக என்ன செய்கிறீர்கள்?"

"நான் சில ஆராய்ச்சிகளில் உதவி செய்கிறேன்."

"ஓ, பரவாயில்லை. இண்டர்வியூவில் நன்றாகச் செய்யுங்கள். அங்கே புரொபஸர் இருப்பார்."

"முயற்சிக்கிறேன்."

நேர்முகத் தேர்வு.

பத்துபேர்கள் இருந்தார்கள். அவள் பொது அறிவு விடைத்தாள் ஒருவர் கையில் இருந்தது.

"உங்களுக்கு நல்ல ஹாஸ்ய உணர்வு இருக்கிறது" என்றார். மற்ற புரொபஸர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

அவள் சிவந்துபோனாள்.

"யூதர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய விரும்புகிறேன் என்று எழுதி யிருக்கிறீர்களே? ஏன்?"

"அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். நசுக்கப்பட்டிருக் கிறார்கள்."

"தமிழர்களை விடவா?"

"என்னது?"

"ஓ, கமான் டாக்டர் த்ரிபாதி. அவளைக் குழப்பாதீர்கள்."

"ஹஹ்ஹா" என்று அவர் சிரித்தார்.

"இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பாவின் அரசியலில் என்ன மாற்றம்?"

"ஒரு பகுதி ரஷ்யாவின் கொள்கையின் கீழ் வந்தது."

"இந்தப் பகுதிகளில் எந்த மாறுதலும் இல்லையா?"

"இல்லை."

"யுகோஸ்லாவியாவில் கூடவா?"

"ஆமாம்."

ஒரு புரொபஸர் அவள் ஹாஸ்ய உணர்வு பற்றி இப்போது ஒப்புக் கொண்டார்.

"நீங்கள் படித்த அனைத்துலகத் தொடர்பு பத்திரிகைகள் யாவை?"

"நினைவில்லை."

"புத்தகங்கள்?"

"நினைவில்லை."

"நீங்கள் பதற்றமடையாமல் மெள்ளச் சொல்லுங்கள்."

"இல்லை, எனக்கு நினைவுக்கு வரவில்லை."

புரொபஸர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"சரி, நீங்கள் போகலாம்."

அவள் பிரிவின் புரொபஸர் அவளிடம் அடிப்படை புத்திசாலித் தனம் – கழுதைத்தனம்? – இருப்பதாகக் கூறி அவளை எடுத்துக் கொண்டார்.

அவள் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தாள். அதிலும் ஒரு மிருகத்தன மான போட்டி இருந்தது. உண்மையான அறிவுஜீவி ஐந்து வருடங் களில் பத்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடுபவனாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆராய்ச்சியாளர்களும் பொந்து களுக்குத் துளையிடும் எலிகளாய் வேகத்துடன் சிலசமயம் அடிப் படை நேர்மையைக் கூடத் தத்தம் செய்து விட்டு, அதில் ஈடுபட்டனர். வேகம் . . . வேகம். . . வேகம். அவளுக்கு இங்கிடமில்லை.

பத்து ஆண்டுகள் தீவிர உழைப்பு, ஏமாற்றம், ஏக்கம், மனமுறிவு, தன்னம்பிக்கையின்மை, வேலை இல்லா நிலைமை, பணமின்மை,

பசி, அன்புக்காகப் பரிதவிப்பு, தன் அறிவின் குறுகலில் விளைந்த கசப்பு இவை எல்லாம். பின்பு டாக்டர் பட்டம்.

இன்னமும் எதற்கும் பயம், பயம், பயம்தான். ஏதோ ஒரு சகாப்தத்தில் அவள் எகிப்திய அடிமையாய் இருந்து சவுக்கடி பட்டவளா? பருத்தித் தோட்டத்தில் வாயெடுத்துப் பாடவும் பயந்து பருத்தி பறித்த கருப்படிமையா? துப்பாக்கி எதிரே மருண்ட கண்களோடு நின்ற யூதர்களில் அவள் ஒருத்தியாக இருந்தவளோ? எங்கிருந்து இத்தனை பயம் அவளை ஆக்ரமித்தது? அது அவளைப் பழி வாங்கும் ஸர்ப்பமாய்த் துரத்தியது. புரொபஸர் அறையில் நுழைந்ததும் அவர் "என்ன விஷயம்?" என்ற உடனேயே நாக்கு ஒட்டிக்கொள்ளும் பயம். கருத்தரங்கில் தன் ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கும்போது குரல் நடுங்கும் பயம். வெளியாட்கள் கேட்டால் புரொபஸர் குறுக் கிட்டுக் கை கொடுக்கும் அளவுக்கு சராசரித்தனம்.

அவள் சில மாதங்கள் வேறு ஊருக்குப் போய்த் திரும்பி வந்ததும் புதுக் கல்வியாண்டு தொடங்கிவிட்டது. புரொபஸர் அறைக்குப் போனாள். பிரிவின் விரிவுரையாளரும் அங்கிருந்தார்.

"புரொபஸர், உங்கள் நேற்றைய லெக்சரைக் கேட்டுவிட்டு மற்ற பிரிவு மாணவர்கள் நம் பிரிவு ஸெமினார்கள் பற்றி மிக உயர்வாக நினைக்கிறார்கள்" என்றார் விரிவுரையாளர்.

"அஞ்சனாவை ஒரு பேப்பர் படிக்கச் சொல்லலாம். இந்தப் பிரமைகள் எல்லாம் போய்விடும்."

இருவரும் சிரித்தனர்.

புரொபஸர் வேடிக்கையாகவே சொன்னார். ஆனால் அவள் தாக்கப்பட்டாள், அவளும் சிரித்தாள் ஒப்புக்கு.

அன்றும் ஒரு கருத்தரங்கு. வெளிநாட்டிலிருந்து ஒருவர் வந்து பேசுவார். அன்று கருத்தரங்கில் பேச வேண்டும் என்று அவள் எண்ணினாள்.

அவர் பேசி முடித்ததும் கணீரென்ற குரலில் "புரொபஸர், உங்களுடன் எனக்கு உடன்பாடில்லை" என்றாள்.

மௌனம்.

அந்த புரொபஸரின் நடுநிலைமை வாதத்திலிருந்த ஓட்டைகளை அவள் சுட்டிக் காட்டினாள். சமீபத்தில் வெளிவந்திருந்த இரண்டொரு ஆராய்ச்சிக் கட்டுரைகளிலிருந்து சான்றுகள் காட்டி அவர் வாதங்களைக் கிழித்தெறிந்தாள். மடையைக் கிழித்துக்கொண்டு வந்த வெள்ளமாய்க் குமுறல், கமறல் இல்லாத பேச்சு. சொற்கள் ரூபமெடுத்து அறையெங்கும் சென்று தொத்திக்கொண்டு தொங்குவது போல் ஓர் உணர்வு. அவள் வாய் பிரம்மாண்ட குகையாய்ப் பிளந்து, பல மிருகங்கள் சீற்றத்துடன் வெளிவருவதைப் போல சொற்கள் சீறிச்சீறிப்

பாய்ந்து சாட்டை வீசும் ஓசையுடன் செவிப் பறையில் வேகத்துடன் மோதுகின்றன.

வெளிநாட்டுப் புரொபஸர் அயர்ந்து போனார் "யாரிந்தப் பெண்?" என்றார் மெல்ல அவள் புரொபஸரிடம்.

"என் மாணவி" என்றார் புரொபஸர்.

அவள் பெருமிதத்தில் முங்கி மிதந்தவாறே புன்னகைத்துக் கொண்டு தலையை நிமிர்த்தியபோது அவளைச் சுற்றிப் பல ஓசைகள், கேள்விகள், பதில்கள், சிரிப்புக்கள்.

"மேலே கேள்விகள் இல்லாததால் இத்துடன் விவாதம் முடிகிறது" என்றார் புரொபஸர்.

இன்னொரு கருத்தரங்கு நடந்து முடிந்துவிட்டது. செத்த பாம்பு களாய்த் தொங்கிய தன் சொற்களை அறையெங்கும் நாற்றமெடுத்துப் போகவிட்டுவிட்டு அவள் எழுந்தாள்.

புரொபஸர் இவளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

பரந்த புல்வெளியில் இமைகள் கனக்க, வருவோருக்கு முதுகைக் காட்டியவாறு அமர்ந்தபோது, நிர்ப்பயமாக, கூச்சமின்றி, சுதந்திரமாக, அவளால் எதையும் வெளிக்காட்ட முடியாது என்று நினைத்தாள். கண்ணீரைக் கூட.

'பிரக்ஞை' டிசம்பர் 1975